Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 183/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **சங்கரேஷ்வரி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**01 .07.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது சாணார்பட்டியில் குடியிருந்து தீப்பெட்டி தொழிற்சாலையில் பணி செய்து வருகிறேன். கடந்த 2025ம் ஆண்டு ஒருநாள் எனது அம்மா ஊரான சின்னமநாயக்கன்பட்டியில் இருந்து கிளம்பி எனது ஊருக்கு நானும், எனது கணவரும், எனது குழந்தையுடன் இருசக்கர வாகனத்தில் செளடாம்பிகா கல்லூரி அருகே தேசிய நெடுஞ்சாலையில் அருப்புக்கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது சுமார் மதியம் 01.15 மணியளவில் எனது மகன் தண்ணீர் வேண்டும் என்று கேட்டான். அதனால் வண்டியை செளடாம்பிகா கல்லூரி வாசல் அருகே நிறுத்திவிட்டு எனது மகனுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு நாங்கள் வண்டியில் ஏறி அருப்புக்கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது பின்னால் இருந்து வந்த கார் அல்லது ஒரு பிளசர் போன்ற வாகனம் அல்லது ஒரு வேன் போன்ற வாகனம் வேகமாக வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதியது. அப்போது எங்கள் வண்டி நொறுங்கிவிட்டது. விபத்தில் எனக்கு வலது தோள்பட்டையிலும், இடது காலிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு மூக்கில் அடிபட்டது.

பின்னர் அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக எங்களை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று சென்றார்கள். எனக்கு கையெழுத்து போட தெரியும். புகார் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேனா அல்லது கைரேகை வைத்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் படித்து காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள உள்ள சங்கதிகள் நான் கூறியது போல் தான் உள்ளது. ஆனால் நான் புகார் வாக்குமூலம் கொடுத்த தினத்தன்று கையெழுத்து தான் செய்து கொடுத்தேன். கைரேகை வைக்கவில்லை. ஆஜர் எதிரி தான் சம்பவத்தன்று எங்கள் மீது மோதிய வாகனத்தை ஓட்டினார். ஒரு மணி நேரத்தில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக அமர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அங்கு 17 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது புகார் வாக்குமூலத்தில் 3 மாதம் எனது தாயார் வீட்டில் இருந்துவிட்டு எனது ஊருக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் எனது தாயார் வீட்டில் சுமார் 4 மாதங்கள் இருந்ததாக தான் கூறினேன், எதற்காக எனது தாயார் வீட்டில் 4 மாதங்கள் இருந்தோம் என்றால் எனது கணவருக்கு வேலை இல்லாததால் இருந்தோம். எனது தாயார் வீட்டில் இருந்து திரும்பி வரும் போது நான் எடுத்துச் சென்ற உடைமைகளை எல்லாம் எனது இருச்சக்கர வாகனத்தில் எடுத்துவந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் தான் நாங்கள் வந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். அப்போது, அவர் கால் வைக்கும் இடத்தில் இருச்சக்கர வாகனத்தில் மூன்று பெரிய துணிப்பைகள் இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது கணவர் திருச்செந்தூரில்இருந்து காலையிலேயே கிளம்பி எனது அம்மா வீட்டிற்கு வந்து என்னை அழைத்து கொண்டு எங்களது ஊருக்கு புறப்பட்டோம் என்றால் சரிதான். அப்போது வெயில் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் நடு மைய வெள்ளை

கோட்டிற்கு வலது புறத்தில் தான் சம்வத்தின் போது எனது கணவர் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான். அப்போது சாலை பணி நடந்த காரணத்தினால் சாலையின் மேல் பூச்சு அகற்றப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.மேற்படி காரணத்தினால் சாலையில் இருசக்கர வாகனத்தை நேராக ஓட்ட முடியாமல் எனது கணவர் சற்று அளம்பி வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான்.

2. நெடுஞ்சாலையில் இருச்சக்கர வாகனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வெள்ளை கோட்டிற்கு எனது கணவர் வாகனத்தை ஓட்டவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வாகனத்தின் முன் பகுதியில் நிறைய துணி பை வைத்திருந்த காரணத்தினால் வாகனத்தை சரியாக திருப்ப முடியாமல் கஷ்டப்பட்டார் என்றால் சரிதான். நான் குழந்தையை கையில் வைத்துபிடித்து கொண்டிருந்த காரணத்தினால் விபத்து நடந்த சமயத்தில் நான் பின்னால் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை நான் பின்னால் திரும்பி பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 183/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **மதியழகன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
01.07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சானார்பட்டியில் குடியிருந்து, பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு நான் காலை கோவிலுக்கு சென்றுவிட்டு எனது மாமியார் வீட்டில் உள்ள எனது மனைவியையும், எனது மகனையும் அழைத்துக் கொண்டு என்னுடைய இருச்சக்கர வாகனத்தை நான் ஓட்டி, பின்னால் எனது மனைவி மற்றும் குழந்தையை உட்கார வைத்துக் கொண்டு என்னுடைய ஊரான சானார்பட்டிக்கு துாத்துக்குடி–அருப்புக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த போது மதியம் 01.30 மணியளவில் பந்தல்குடி அருகே உள்ள சௌடாம்பிகா பொறியியல் கல்லூரி அருகே எனக்கு பின்னால் இருந்து வந்த ஒரு வாகனமானது எனது வாகனத்தில் இடித்துவிட்டது. பின்பு என்மீது மோதிய வாகனம் கார் என்று கேட்டு தெரிந்து கொண்டேன்.

2. விபத்தில் எனக்கு தலையிலும், குறுக்கிலும் காயம் ஏற்பட்டது. எனது மனைவிக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனது குழந்தைக்கு மூக்கிலும், உதட்டிலும் காயம் ஏற்பட்டது. பின்னர் சம்பவ இடத்தில் இருந்து எங்களை ஆம்புலன்ஸ் மூலமாக அருப்புக்கோட்டை

அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக எங்களை மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் நாங்கள் மதுரைக்கு செல்லாமல் அருப்புக்கோட்டையில் உள்ள அமர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டோம். நான் சுமார் 16 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனது மனைவி சுமார் 21 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். என் மீது மோதிய வாகனத்தை ஓட்டிய நபர் மதுரையை சேர்ந்தவர் என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அவரை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவத்தன்று நான் காலையில் திருச்செந்தூர் கோவிலில் இருந்து இருச்சக்கர வாகனத்தில் வந்தேன் என்றால் சரியல்ல. திருச்செந்தூரில் இருந்து வேனில் எனது மாமியார் வீட்டிற்கு வந்தேன். அங்கிருந்துதான் இருச்சக்கர வாகனத்தில் வந்தேன். நான் விபத்து நடந்த சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அணிந்திருந்தேன். ஆனால் தலைகவசத்தில் கீழே உள்ள பெல்ட் மாட்டவில்லை. என்னிடம் இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்காக ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான்கு மாதம் கழித்து எனது மனைவியை மாமியார் வீட்டில் இருந்து அழைத்து வந்த காரணத்தினால் இருச்சக்கர வாகனத்தின் முன் பகுதியில் நிரைய பைகளை வைத்திருந்தேன் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் மைய பகுதியில் உள்ள வெள்ளை கோட்டிற்கு வலது புறம் தான் சம்பவத்தின் போது நான் எனது இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான்.

2. சம்பவத்தின் போது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சாலைகள் இயந்திரத்தினால் வெட்டப்பட்டு வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் எனது வாகனத்தை சீராக என்னால் ஓட்ட முடியவில்லை என்றால் சரிதான். எனது வாகனத்தின் இடது புறம் தான் சேதம் அடைந்துள்ளது என்றால் சரிதான். வலது புறத்தில் இருந்து கவனிக்காமல் சாலையில் நான் இடது புறம் திரும்பும் போது தான் வாகனவிபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது இருச்சக்கர வாகனத்தின் முன்பு பைகள் அதிகமாக இருந்ததால் எனது வாகனத்தை திருப்புவதற்கு எனக்கு சிரமமாக இருந்தது என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் திருப்பும்போது ஹாரன் அடிக்காமல் பின்னால் இருந்து வாகனம் வேகமாக

வந்தது. நான் இடது புறம் திரும்பும் போது எந்த ஒரு சைகையும் காண்பிக்காமல் கைகாட்டாமல் தான் திரும்பினேன் என்றால் சரிதான்.

3. என்னுடைய வாகனத்திற்கான பதிவெண் 15 வருடத்திற்கு பின்பு புதுபிக்கப்படவில்லை என்றால் வாகனம் என்னுடையது அல்ல. அதனால் எனக்கு தெரியாது. வாகனத்தை ஓட்டும் போது நான் மது போதையில் இருந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் தான் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. முதலுதவி வழங்கிய பிறகு மேல்சிகிச்சைக்காக அவர்கள் தான் அனுப்பி வைத்தார்கள். சாலை விதிமுறைகளை நான் பின்பற்றாமல் முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் நான் இருச்சக்கர வாகனத்தில் நான் அதிகப்படியான சுமைகளை ஏற்றிக் கொண்டு நெடுஞ்சாலையில் கவனக்குறைவாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**